**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 78/2015**

**வழக்கு சாட்சி: PW.11**

**தேதி: 07.07.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **செங்கொடி** | **ஜாதி:** | |
| **கணவர் பெயர் :** | **கிருஷ்ணமூர்த்தி** | **தொழில்:** | **தலைமைக் காவலர்** |
| **கிராமம்:** | **மானாமதுரை** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **மானாமதுரை** | **வயது:** | **42/2023** |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் திருப்புவனம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 07.01.2015 அன்று மானாமதுரை சிப்காட் காவல் நிலையத்தில் பெண் முதல் நிலைக் காவலராக பணிபுரிந்து வந்தேன். எனக்குரிய எண்.753 ஆகும். அன்றைய தினம் நான ்பணியிலிருந்த போது நிலையக் குற்ற எண். 3/2015 பிரிவுகள் 294(பி), 302, 506(2) இதச வழக்கில் கொலையுண்டு இறந்து போன வேலூர் ஒத்த வீட்டு கிராமத்தைச் சேர்ந்த பாண்டிதுரை மனைவி ராஜேஸ்வரி என்பவரின் பிரேதத்தின் மீது மானாமதுரை அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் காலை 07.00 மணி முதல் 09.00 மணி வரை நடைபெற்ற விசாரணையில் ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். பிரேத விசாரணை முடிந்த பிறகு ஆய்வாளர் கொடுத்த கடிதத்தை மானாமதுரை அரசு மருத்துவமனை மருத்துவரிடம் ஒப்படைத்தும் ராஜேஸ்வரியின் பிரேதத்தினை அடையாளம் காட்டியும் மருத்துவர் பிரேத பரிசோதனை செய்யும் போது உடன் உதவியாக இருந்தும், பிரேத பரிசோதனை முடிந்த பின்னீடு பிரேதத்தை நல்லடக்கம் செய்வதற்காக ராஜேஸ்வரியின் தகப்பனார் இருளப்பன் என்பவரிடம் ஒப்படைத்தேன். 23.01.2015ம் தேதி ஆய்வாளர் அவர்கள் உத்தரவின் படி மேற்படி நிலையக் குற்ற எண்ணில் சம்பந்தமாக கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மானாமதுரையில் பி.ஆர்.எண்.4/2015 பிரகாரம் ஒப்படைத்துள்ள சொத்துக்களை நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவுப்படி ராசாயண பகுப்பாய்வு செய்வதற்கு இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல்

ஆய்வகத்தில் ஒப்படைத்து RMD/BIOL/3/2015 பெற்று நிலையம் வந்து அறிக்கை செய்தேன். ஆய்வாளர் விசாரிக்க நடந்த விபரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் மேற்கொண்ட பணியினை செய்தது சம்பந்தமாக பணிப் பதிவேடு ஏதேனும் என்னை விசாரணை செய்த ஆய்வாளரிடம் தாக்கல் செய்தேனா என்றால் கடவுச் சீட்டினை ஆய்வாளரிடம் ஒப்படைத்துள்ளேன். பிரேத விசாரணை ஆய்வாளர் செய்யும் போது கலந்து கொண்ட பஞ்சாயத்தார்கள் பற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் ஆய்வாளருக்கு தான் தெரியும், எனக்கு தெரியாது. இந்த வழக்கில் 3 நபர்கள் இறந்து போன விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 3 நபர்களுக்குரிய பிரேத விசாரணை கோரும் கடிதங்களை தனித்தனியாக கொண்டு சென்றோம். 3 நபர்களுக்குரிய பிரேத விசாரணை கோரும் கடிதங்களை தனித்தனியாக கொண்டு சென்றோம் என்று சொல்வது நம்பத்தக்கதாக இல்லை என்றும் இந்த பொய் வழக்கில் எதிரிக்கு எதிராக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து அனுமதிக் கடிதம் பெற்று இராமநாதபுரத்தில் உள்ள ராசாயண பகுப்பாய்வு ஆய்வகத்திற்கு வழக்குச் சொத்துக்களை கொண்டு சென்றதற்கான நேரத்தை ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது குறிப்பிட்டு சொன்னேனா என்றால் இல்லை. பிரேத பரிசோதனை கோருவதற்கு மருத்துவரிடம் நான் கொடுக்க வேண்டிய கடிதத்தை ஆய்வாளர் எனக்கு மருத்துவமனையில் வைத்து கொடுத்தார். அந்த கடிதத்தை யார் தயார் செய்தது என்று எனக்கு தெரியுமா என்றால் ஆய்வாளர் தயார் செய்தார். பிரேத பரிசோதனையின் போது பிரேதத்தை மருத்துவருக்கு அடையாளம் காட்டிய பிறகு பிரேத பரிசோதனை நடைபெறும் போது நான் மருத்துவருடன் இல்லை என்று சொன்னால் சரியல்ல நான் உடன் இருந்தேன். பிரேத பரிசோதனை செய்யும் போது மருத்துவத் துறைச் சார்ந்தவர்கள் தவிர வேறு வெளி நபர்களுக்கு அனுமதி இல்லை என்றும் நான் பிரேத பரிசோதனையின் போது உடன் இருந்தேன் என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் நான் பிரேத விசாரணையின் போது உடன் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் எந்த வேண்டுகோள் கடிதமும் பிரேத பரிசோதனை செய்ய மருத்துவரிடம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிரியை இந்த பொய் வழக்கில் சேர்ப்பதற்காக இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி எனக்கு

மேலதிகாரி என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.78/2015**

**வழக்கு சாட்சி: PW.12**

**தேதி: 07.07.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **சத்யா** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **சுதந்திரம்** | **தொழில்:** | **தலைமைக் காவலர்** |
| **கிராமம்:** | **மானாமதுரை** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **மானாமதுரை** | **வயது:** | **40/2023** |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் மானாமதுரை போக்குவரத்து காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 07.01.2015ம் தேதி மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராக பணியிலிருந்தேன். அன்றைய தினம் நிலையக் குற்ற எண்.3/2015 பிரிவுகள் 294(பி), 302, 506(2) இதச வழக்கில் கொலையுண்டு இறந்து போன வேலூர் ஒத்த வீட்டைச் சேர்ந்த இருளப்பன் மனைவி தனபாக்கியம் என்பவரது பிரேதத்தின் மீது மானாமதுரை அரசு மருத்துவமனையில் ஆய்வாளரால் பஞ்சாயத்தார்கள் முன்பு நடத்தப் பெற்ற பிரேத விசாரணையின் போது நான் ஆய்வாளருக்கு உதவியாக அவருடன் இருந்தேன். பிரேத விசாரணை காலை 07.00 மணி முதல் 09.00 மணி வரை நடைபெற்றது. அதன் பின்னீடு தனபாக்கியம் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக ஆய்வாளரிடம் கடிதம் பெற்று மானாமதுரை அரசு மருத்துவமனை மருத்துவரிடம் ஒப்படைத்து பிரேதத்தை மருத்துவருக்கு அடையாளம் காட்டி மருத்துவர் பிரேத பரிசோதனை செய்யும் போது நான் உடன் இருந்தேன். பிரேத பரிசோதனை முடிந்த பின்னீடு பிரேதத்தை அவரது கணவர் இருளப்பன் என்பவரிடம் குலவழக்கப்படி நல்லடக்கம் செய்வதற்காக பிரேதத்தை ஒப்படைத்தேன். ஆய்வாளர் விசாரிக்க நடந்த விபரங்கள் கூறினேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

பிரேத விசாரணையின் போது கலந்து கொண்ட பஞ்சாயத்தார்கள் விபரம் பெயர் விபரம், ஊர் விபரம் எனக்கு தெரியுமா என்றால் பெயர்கள் தெரியாது ஊர்

மட்டும் தெரியும். இறந்து போன நபரின் ஊரைச் சேர்ந்த 50, 60 பேர் அங்கு கூடியிருந்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு கூடியிருந்ததால் அவர்கள் அந்த ஊரைச் சார்ந்தவர்கள் என்று நான் சொல்கிறேன் என்றும் எனக்கு அவர்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்று எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் அன்று தினம் அந்த பணியில் தான் இருந்தேன் என்று பணிப் பதிவேடு எதுவும் ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் கடவுச்சீட்டு கொடுத்துள்ளேன். இந்த வழக்கில் இறந்து போனவர்கள் 3 நபர்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இதில் அனைத்து பிரேதங்களுக்கும் பிரேத விசாரணை தனித்தனியாக நடைபெற்றது என்றும் ஒன்றாக நடைபெறவில்லை என்றும் சொன்னால் ஒன்றாக தான் நடைபெற்றது. பிரேத பரிசோதனை செய்யக் கோரும் வேண்டுகோள் கடிதத்தை ஆய்வாளர் எனக்கு காவல் நிலையத்தில் வைத்துக் கொடுத்தார். பிரேத விசாரணை முடிந்த பின்னீடு பிரேத பரிசோதனை கோரும் வேண்டுகோள் கடிதத்தை ஆய்வாளரிடமிருந்து காவல் நிலையத்தில் தான் பெற்றேன் என்ற விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் நான் சொன்னேனா என்றால் நான் சொல்லியுள்ளேன். மற்ற பிரேதங்களை பிரேத பரிசோதனை செய்யும் வேண்டுகோள் கடிதங்களை ஆய்வாளர் மருத்துவமனையில் வைத்துக் கொடுத்தாரா அல்லது காவல் நிலையத்தில் வைத்துக் கொடுத்தாரா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மற்ற இரண்டு பிரேத பரிசோதனை செய்யக் கோரும் கடிதங்களை கொண்டு சென்ற காவலர்கள் என்னுடன் பணிபுரியும் காவலர்கள் என்ற விபரமும் அவர்கள் பற்றிய விபரமும் எனக்கு தெரியுமா என்றால் காவலர்கள் பற்றிய விபரம் எனக்கு தெரியும். நான் சொல்வது போல் நான் பிரேத விசாரணையின் போது ஆய்வாளருடன் இல்லை என்றும் அந்த சமயத்தில் நான் அந்த இடத்தில் இல்லை என்றும் வேண்டுகோள் கடிதம் எதுவும் ஆய்வாளரிடமிருந்து பெற்று மருத்துவரிடம் நான் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி என்னுடைய மேலதிகாரி என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரேத பரிசோதனை செய்யப்படும் போது பிரேத பரிசோதனை செய்யும் கூடத்திற்கும் மருத்துவர்கள் மற்றும் மருத்துத் துறையினரை தவிர வேறு யாருக்கும் அனுமதி இல்லை என்று சொன்னால் எங்கள் முன்னிலையில் தான் பிரேத பரிசோதனை நடைபெறும். நான்

கூறுவது போல் பிரேத பரிசோதனையின் போது நான் மருத்துவருடன் இல்லை என்று சொன்னால் சரியல்ல.